# செம்மண்

நிலம் 3 துகள் 144 வள்ளுவர் ஆண்டு 2052,  22 - 28 சித்திரை 2023 வாரமலர் பக்கங்கள் 19



# காசைக் கல்லாக்குகிற வேலைதானோ?

> "நயினாதீவு அம்மனுக்குக் கோயில், மடங்கள், அது இதுவெண்டு ஆர்ப்பாட்டம் பண்ணின நாங்கள் குறிகாட்டுவான் துறையிலை ஒரு மடத்தையாவது கட்டினமோ? அதைச்சுத்தி நாலு வேப்பமரத்தைத்தான் நட்டமோ? மடத்திலை சனமிருக்க அம்மன் ஆறுதலாய் வேம்பிலை இருந்திருப்பாவல்லே?"

**கதிரேசன்**

புது வரிசம் புதிசாய் ஒண்டுமே இல்லாதமாதிரி ஒரு சலிப்பாய் இருந்துது. வரிசக் கொண்டாட்டம் ஊரிலையிருக்கிற கோயிலுகளிலையெல்லாம் போட்டிக்குப் பாட்டு.... காதுகள் கிழிஞ்சு மண்டை சிதறுகிற கட்டம்... மருமேன் ஆரோடையோ போனிலை கதைக்கிறதுக்குப் படாதபாடு பட்டுக் கத்திக்கொண்டிருந்தார். சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டை போவமெண்டு வெளிக்கிட்டுப் போனன். அங்கை மாஸ்ரரோடை மயிலர், செல்லர், முருகேசர் மற்றது கனகர் கதைச்சுக்கொண்டிருந்தினம். 'வாரும்.. வாரும் கதிரேசு.. ஒராள் குறையுதெண்டு பாத்தம்...' எண்டு மாஸ்ரர் உற்சாகமாய் வரவேற்றார். இருந்துகொண்டன். 'கனகர் என்னப்பா வருசம் வலு சத்தமாத்தான் பிறந்திருக்கு...என்ன?' எண்டு கனகரைக் கேக்கிறமாதிரிப் பொதுவாக் கேட்டார் மயிலர். 'மயிலர்... இண்டைக்கே இப்பிடிச் சத்தம்... உதொரு பிரச்சனையே? .... சத்தங் கேக்காட்டியல்லோ என்னவோ ஏதோவெண்டு பயமாக்கிடக்குது' எண்டு மாஸ்ரர் சொல்லிச் சிரிக்க நாங்களும் சிரிச்சம்.
'உண்ணாணை மாஸ்ரர் சரியாத்தான் சொன்னியள்... நாசமறுவார் விடியக்கு முன்னம் தொடங்கி சாமம் வரைக்குமல்லே குளறவிடுகிறாங்கள்.... சாமியள் பாடு எப்பியிருக்கும்?' எண்டார் செல்லரண்ணை எரிச்சலாய். 'சாமியளை நாங்கள் எப்பவெண்டாலும் சும்மா இருக்க விடுகிறநாங்

களோ?' எண்டு கேட்டார் முருகேசர். 'அப்பிடி விட்டால் அவையள் நித்திரையாகிப் போகுடுவினமல்லே?' எண்டு நான் சொல்ல அதுக்கும் சிரிச்சினம்.

'இஞ்சார் தெரியாமறந்தான் கேக்கிறன்... கடவுளுக்குக் காது கேக்காதோ? உப்பிடிக் கத்திக் குழற வேணுமோ?' எண்டார் கனகர். 'இஞ்சாரப்பா கனகு பகிடிவிடாதை உதுகள் தெய்வக் குற்றமாகிப் போகிடும்' எண்டார் செல்லர். 'உதைத்தானே காலங்காலமாச் சொல்லி வெருட்டிக் கொண்டிருக்கிறியள் கடவுளைச் சந்தியளிலையும் குப்பைகளுக்குள்ளையும் வைச்சும் ஒண்டுமே செய்யேலாத கடவுள்...' எண்டார் மயிலர் எரிச்சலோடை.

'கதைக்குள்ள உங்கை பண்ணைச் சந்தியிலை அம்மன் சிலை வைச்சதிலை உள்ள நிலைமை என்னவாம்?' எண்டு கேட்டார் மாஸ்ரர். 'ஓமோம்.... குறிகட்டுவானிலை அரசமரம் நட்டாச்சுதெண்ட குரலுக்கு எதிர்ப்புக் குரல் வேண்டாமோ?' எண்டு நிப்பாட்டினார் வழக்கம்மாதிரியே முருகேசர். 'என்ன முருகேசர் அம்மன் சிலைக்குப் பின்னாலை முன்னாலையும் ஏதோ கிடக்குது போலை?' எண்டு ஆவலானார் மாஸ்ரர்.

'பின்னாலை முன்னாலை மட்டுமில்லை சுத்திக் கிடக்கிற விசயங்கள் கனக்கவாம் எண்டும் காதிலை அடிபட்டுது....மரங்களை நாங்கள் சரியான முறையிலை பராமரிக்கிறதைச் செய்திருந்தால?;... குறிகாட்டுவானை எடுங்கோவன்... நாளாந்தம் ஆயிரக் கணக்கிலை சனம் புளங்குகிற இடமல்லே?.... நாங்கள் ஆராவது எப்பவாவது அதிலை நிழலுக்கெண்டு ஒரு தடியை நடுகிறதைப்பற்றி யோசிச்சிருப்பமோ?' எண்டு முருகேசர் சொல்லிக்கொண்டிருக்கச் சுதன் வீட்டுக்குள்ளையிருந்து வந்து எங்களோடை இருந்துகொண்டான்.

'சரியாச் சொன்னீர் முருகேசு.... கோயிலடியளிலை காலங்காலமாய் நிண்ட மரங்களை வெட்டித் தேருக்கும் மஞ்சத்துக்கும் வீதிபோட்டு வியாக்கியானம் செய்தமே தவிர வேறையென்னத்தைச் செய்தனாங்கள்?' எண்டார் மாஸ்ரர். 'உதைவிட மாஸ்ரர் நாங்கள் செய்யிற பெரிய அனியாயம்... என்னவெண்டு சொல்லுங்கோ பாப்பம்?' எண்டு கேட்டார் முருகேசர். :அதென்னப்பா முருகேசு அப்பிடி? நீயே சொல்லனப்பா?' எண்டன் நான். மற்றவையும் ஆமோதிச்சினம். 'அதென்ன? கிடக்கிற கோயிலுகளை உடைச்சுடைச்சு கோடிக்கணக்கிலை கட்டுறதோ?' எண்டான் சுதன். 'நீயெடா தம்பி வலுகெட்டி.... சரியாச் சொன்னாய்... நயினாதீவு அம்மனுக்குக் கோயில், மடங்கள், அது இது வெண்டு ஆர்ப்பாட்டம் பண்ணின நாங்கள் குறிகாட்டுவான் துறையிலை ஒரு மடத்தையாவது கட்டினமோ? அதைச்சுத்தி நாலு வேப்பமரத்தைத் தான் நட்டமோ? மடத்திலை சனமிருக்க அம்மன் ஆறுதலாய் வேம்பிலை இருந்திருப்பாவல்லே?' எண்டு கொதிச்சார் முருகேசர்.

'சமயத்தை வளக்கிறமெண்டு அலப்பறை போட்டுத்திரியிற ஆசாமியளுக்கு முன்கூட்டியே யோசிக்கிற அறிவு கிடையவே கிடையாது....' எண்டு எல்லாரையும் வழமைபோலப் பாத்தார் முருகேசர். 'உதைச் சொன்னால் சண்டைக்கல்லே வருகினம்... கன்னியாவிலை நடந்தது தெரிஞ்ச பிறகும் கூட...' எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க மயிலர் இடைமறிச்சு 'கன்னியாவிலை.... சுடுதண்ணிக் கிணறு?...ஓஓ.. அதுக்கு' எண்டு தடுமாறினார். 'அங்கை கிடந்த ஆதிச் சிவன் கோயிலை பெரிசாய்க் கட்டவெண்டு உடைச்சனாங்கள்... உடைச்சு முடிய கேஸ் போட்டிட்டாங்கள்.... இப்ப எத்தினை வருசம்...ஒண்டுமில்லை... அது இப்ப வெல்கம பனிதபூமி...வாயைப் போட்டுச் சப்பின தோடை சரி...' எண்டான் கோவத்தோடை சுதன். 'தம்பி புதுப்பிக்க நினைச்சதிலை என்ன பிழை?' எண்டு கனகர் கேக்க 'நினைப்புத் தானே பிழைப்பைக் கெடுக்கிறது எண்டு சும்மாவே சொன்னவங்கள்? ஆதியிலை ராவணன் கட்டினதெண்டு இப்ப சொல்லுகிற நீங்கள் அதை ஏன் உடைச்சனீங்கள்? அதிலை கை வைக்காமல் அதைச் சுத்தியோ பக்கத்திலையோ பெரிசாய்ச் செய்திருக்கலாமல்லே?' எண்டார் முருகேசர்.



'உண்மையிலும் உண்மை முருகேசு....தொல்லியல் பெறுமதியெண்டிற விசயத்தை நாங்கள் எங்கடை சமயத்தலைவர்கள்கூட விளங்காமல் தான் இருக்கிறம்.... பழைசுகள்தான் ஆதாரம்...அதுகளை அழிக்கிறதையல்லே செய்யிறம்? எங்கையெண்டாலும் பழைய கோயிலுகளை அப்பிடியே பாதுகாக்கிறமோ? உடைக்கிறது உடைச்சதை விக்கிறது புதிசாய் ஒரு பொருத்தமுமிலாமல் கட்டுறது...'எண்டுமாஸ்ரர் சொல்லிக் கொண்ருக்க 'கணக்குவழக்கிலை அடிபடுகிறது... கோயிலை கோட்டிலை பாரப்படுத்துகிறது எண்டு மல்லே செய்யிறம்' எண்டு நான் சொல்ல எல்லாரும் கவலையோடை தலையளை ஆட்டிச்சினம்.

'உண்மைதான் கதிரேசு...செய்யிற செய்யவேண்டின வேலையளை விட்டிட்டு சிவலிங்கம் வைக்கிறது... கிடக்கிறதுகளை பாதுகாக்காமல் விட்டிட்டு அவன் கண் வைச்சிட்டான்.. கை வைச்சிட்டான் எண்டு ஆர்ப்பாட்டம் போடுறது...சீய்க்... கேவலமாயல்லே நிலைமை போகுது...' எண்டு மாஸ்ரர் பெருமூச்சுவிட்டார். 'உண்மைதான் மாஸ்ரர்... கடவுள் புனிதமானவர் எண்டு சாதிச் சண்டைக்கே காரணமாயிருந்தம்...கோயிலுக்கை எல்லாரும் போகக்கூடாதெண்டம்... இப்ப சாமி சிலையள், சிவலிங்கம் எண்டு ஒருவிதமான கவலையுமில்லாமல் சிலையளை வைக்கிறம்' எண்டன் நான்.

'ஆனால் இப்ப உது எல்லாரையும் ஒண்டாக்கும்போலை?' எண்டார் மயிலர். 'எப்பிடி மயிலண்ணை?' எண்டார் கனகர். 'கட்சியள் சங்கங்கள் எண்டு ஒண்டாய் நிக்கிறதுக்கு ஒரு சந்தற்பமல்லே?' எண்டார் மயிலர். ஏல்லாரும் ஒரு சிரிப்புச் சிரிச்சம். சுதன்தான் கதைச்சான் 'மயிலுமாமா, மொழி, இனம் எண்டிற பொதுவான விசயத்திலையே ஒண்டாயிருக்காத நாங்கள்? இப்ப? சமயத்துக்காக

(19ம் பக்கம் பார்க்க)



# இங்கிதமில்லா இனம்

**எட்வின் றூள்ஸ்**

இருவர் உரையாடிக்கொண்டிருக்கும்போது அங்கு வரும் மற்றைய நபர் அதற்குள் குறுக்கிட்டுக் கதைப்பதும், உங்கள் உரையாடலுக்குள் நானும் பங்குபற்றலாமா? என்று கேட்காமல் உள்நுழைவது ஆகிய நடத்தையுள்ளவர்களை இங்கிதம் இல்லாதவர் அல்லது இங்கிதம் தெரியாதவர் என்று வரையறுக்கலாம். இத்தகைய இங்கிதம் இல்லாத இனம் என்று வரையறுக்கும் நிலையில் ஓர் இனம் இருப்பதுதான் இங்கு ஆச்சரியமான விடயம். தற்போதைய நிலையில் தமிழினம் இழந்துள்ள மிகப் பெறுமதியான விடயம்தான் இந்த இங்கிதம். சமூக வலைத்தளங்கள், தொலைபேசி உரையாடல்கள், முகநூல் பதிவுகள், அரசியல் தலைவர்களின் எதிர்வினைகள், விமர்சனங்கள் எனப் பல விடயங்களில் இந்த இங்கிதமற்ற தன்மையைக் காண முடியும்.

**கூடிக் கதைக்க முடியாத நிலை**

தமிழர்களில் 50பேரை உள்ளடக்கிய ஒரு கூட்டத்தையோ, ஒன்றுகூடலையோ திறம்பட நடத்த முடியாத அளவுக்கு அவர்களால் இடையூறுகள் அதிகம் எழுப்பப்படுகின்றன. ஒருவர் பேசுவதைச் செவிமடுத்து அதற்கான கேள்விகளைத் தொகுத்துக் கலந்துரையாடலாக நடத்தி முடிக்கப்படவேண்டிய நிகழ்வுகள் எல்லாம் நாலாபுறமும் கேள்விகளைக் கேட்டு ஆளுக்காள் வித்துவப் போட்டியைக் காட்ட முற்பட்டு அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கமோ சீரழிந்து போய்த் திசைமாறி முடிவடைகிறது.

இது தற்செயலக இடம்பெறும் தவறல்ல. திட்டமிட்டுச் செய்யப்படும் தவறாகவே அதிகம் இருக்கிறது. கிரேக்க நகாரீகம் கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலத்திலேயே அறிவியல், அரசியல், கலைகள், சமூக விடயங்கள், சிற்பம், ஓவியம் எனப் பல துறைகளில் வளர்ச்சியடைந்திருந்தது. அதற்குக் காரணம் ஒவ்வொருவரும் தமது ஆளுமையை நாகரிகமான முறையில் நிரூபித்ததாகும். ஒருவர் செய்ததைவிட மற்றவர் மேலும் திறமையாக அல்லது மேம்பட்ட நிலையில் செய்து காட்டும் வழக்கம் அங்கிருந்தது. அதனாலேயே இன்னும் உலகம் கொண்டாடும் விதத்தில் கிரேக்கப் பாரம்பரியம் இருக்கிறது.

**ஓவியப் போட்டி**

கிரேக்கத்தில் ஓவியர் ஒருவர் திராட்சைப் பழங்களை ஓவியமாகக் கீறி அதைப் பொது இடத்தில் வைத்து ஒரு சவால் விடுத்தார். நான் கீறிய திராட்சைப் பழங்களை நிஜமான பழங்கள் என்று நினைத்துக் குருவிகள் வந்து கொத்தும் என்றார். அந்த ஓவியத்தைக் காட்சிக்கு வைத்தபோது அவர் சொன்னதுபோல அந்த ஓவியத்தில் உள்ள திராட்சைப் பழங்கள் உண்மையானவை என்று நினைத்துச் சில குருவிகள் வந்து கொத்தி ஏமாந்து சென்றன. இந்தச் சம்பவத்தை அனைவரும் பாராட்டியபோது இன்னோர் ஓவியர் அந்த இடத்தில் வைத்து அவருக்குச் சவால் விட்டார். இதைவிட மகோன்னதமான ஓர் ஓவியத்தை வரைந்து இந்த இடத்தில் நான் காட்சிக்கு வைப்பேன் என்றார். அவர் ஓவியத்தைக் காட்சிப்படுத்துவதாகச் சொன்ன அந்த நாள் வந்தது. அவரது ஓவியம் திரைபோட்டு மறைக்கப்பட்டிருந்தது. தான் சவால் விட்ட, முன்பு திராட்சைப் பழங்களை வரைந்த ஓவியரை அழைத்துத் தனது ஓவியத்தைத் திறந்து வைக்குமாறு கூறினார் அந்தப் புதிய ஓவியர். அந்த




**தமது இயலாமையை மறைப்பதற்காகச் சேவை செய்தவரை விமர்சித்து இதில் ஊழல், மோசடி முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று வாதிட்டு மக்களுக்கு எதுவும் செய்யாமலேயே தம்மை உயர்ந்தவர்களாகக் காட்டும் இங்கிதமற்ற தன்மை வளர்ந்துள்ளது**

ஓவியர் திரையைத் திறப்பதற்காகத் திரைக் கயிற்றைப் பிடித்தபோதுதான் தெரிந்தது, அது திரையல்ல... ஓவியம் என்று. அவர் கீறிய ஓவியமே அந்தத் திரைதான் என்று. நீ குருவிகளைத்தான் ஏமாற்றினாய் நான் ஓவியனான உன்னையே ஏமாற்றியிருக்கிறேன் - என்றாராம் அந்தப் புதிய ஓவியர்.

**விபத்துகளின்போது இங்கிதமில்லாமல் தலையிடுவது**

ஒரு விபத்து நடந்து சம்பந்தப்பட்ட இருவரும் யாரில் சரி, பிழை, அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்பதை விவாதித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர் அந்த விபத்தைக் கண்ணால் காணாத பலர் அங்கு வந்து தாம் அந்த விபத்தை நேரில் கண்டதுபோல சரி, பிழை கதைத்துச் சண்டை பிடித்து சம்பந்தப்பட்ட இருவரையும் சிக்கலுக்குள்ளாக்கும் சம்பவங்கள் மலிந்துவிட்டன.

**அரசியலில் இங்கிதமின்மை**

அரசியலில் தாம் மக்களுக்காகச் செயற்படுகிறோம் என்று காட்டிக்கொள்ளும் எந்தத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஆளையாள் குற்றம் சாட்டுகின்றனரே தவிர, ஓர் அரசியல்வாதி செய்த மக்கள் சேவைக்கு மேலதிகமாகத் தானும் எதையாவது மக்களுக்குச் செய்துகொடுக்கவேண்டும் எனப் போட்டி போடுவதில்லை. தமது இயலாமையை மறைப்பதற்காகச் சேவை செய்தவரை விமர்சித்து இதில் ஊழல், மோசடி முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று வாதிட்டு மக்களுக்கு எதுவும் செய்யாமலேயே தம்மை உயர்ந்தவர்களாகக் காட்டும் இங்கிதமற்ற தன்மை வளர்ந்துள்ளது.

இதனால்தான் ஒன்றாகச் சேர்ந்து மக்களுக்கான ஒரு சேவையையோ நலத் திட்டங்களையோ முன்னெடுக்கத் தமிழ்த் தலைவர்களால் முடியவில்லை.

**சுகிர்தன் விவகாரம்**

அண்மையில் வலி வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தன் தொடர்பில் வெளியான தகவல் கவனிக்கத்தக்கது. பெண் ஒருவர் சுகிர்தனின் வீட்டில் எரிந்து சாவடைந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார். ஈ.பி.டி.பி அல்லது அங்கஜன் போன்ற அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளைச் சார்ந்தவராகச் சுகிர்தன் இருந்திருந்தால் எவ்வித இங்கிதமும் இல்லாமல் தமிழ் அரசுக் கட்சி ஊடகங்கள் அதைத் தமது தேர்தலுக்காகப் பயன்படுத்தியிருப்பர்.



ஆனால் ,சுகிர்தனின் விடயம் அமுக்கி வாசிக்கப்படுகிறது. இவ்வளவு சம்பவங்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சாராத ஒருவர் செய்திருந்தால் அதன் எதிர்வினை எந்த விதமான இங்கிதமும் இல்லாமல் இருந்திருக்கும்.

**நல்ல குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும்**

நல்ல குடும்பம் என்பதைத் தமிழ் மக்கள் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற அடிப்படையிலேயே விளங்கி வைத்திருக்கிறார்கள். அன்பான பெற்றோருக்கும், கட்டுப்பாடான வளர்ப்பிற்கும் உற்பட்டவர்களையே நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களாக வரையறுக்க முடியும். அடாவடித்தனமாக வளர்க்கப்பட்டவர்களே எல்லா இடங்களிலும் இங்கிதமற்ற முறையில் நடந்துகொள்வதைக் காணலாம். இங்கிதம் என்ற விடயத்துக்குப் படிப்பு அவசியமில்லை. இது பண்பாட்டுடன் தொடர்புபட்டதாகும். பண்பாடான குடும்பத்தில் பிறந்தவர்களாலேயே மற்றவர்களுக்கு இடையூறின்றி இங்கிதமாக நடந்துகொள்ள முடியும்.



# சுதந்திரமாக உலாவுகின்றனர் சூத்திரதாரிகள்...?

சூடாமணி

சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய தமிழர்களின் போராட்டத்தைப் பல நாடுகளின் உதவியுடனும், ஆதரவுடனும் முடிவுக்குக் கொண்டுவந்து வருடா வருடம் வெற்றிக் கொண்டாட்டங்களை நிகழ்த்தியது சிங்கள அரசு. பத்தாவது வருட வெற்றிக் கொண்டாட்டத்துக்கு ஒரு மாதம் இருந்த நிலையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பெரியளவான தாக்குதல் ஒன்று நடந்து முழு இலங்கையையும் நிலைகுலையச் செய்தது. சிங்கள அரசோடு ஒட்டி நின்று தமிழர்களின் ஆயுதப்போராட் டத்தை ஒடுக்க உதவிய முஸ்லிம் தரப்பினர் குறித்த அச்சம் சிங்களப் பெரும்பான்மையினருக்குள் மேலோங்கியது. இந்தத் தாக்குதலில் குறி வைக்கப்பட்டது சிங்கள - பௌத்தர்கள் அல்லாதிருந்தமையானது தாக்குதல் நடத்திய தரப்பினருக்கு அடுத்துத் தாக்குதலுக்கு வழிகோலிய சூத்திரதாரிகளும் பின்னணியில் இருக்கின்றனர் என்ற சந்தேகத்தைக் கிளப்பியது. அது குறித்துப் பொது வெளியில் கிறிஸ்தவத் தலைமைகள் கேள்வி எழுப்பியுமுள்ளன. ஆனாலும் அனைத்து நிலவரங்களும் மூடு மந்திரமாகவே இன்று வரை இருக்கின்றன.

**உயிர்த்த ஞாயிறு தின நினைவு**

இலங்கையில் நடந்த சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் கொடூரத்தால் உயிர்த்த ஞாயிறு தினமானது இலங்கையில் மறக்காதிருக்கும் அளவுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல் நடந்து 4வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் நீர்கொழும்பு - கட்டுவாப்பிட்டி தேவாலயத்திலிருந்து கொழும்பு கொச்சிக்கடைத் தேவாலயம் நோக்கிப் பாதிக்கப்பட்ட மக்களும் கிறிஸ்தவ அமைப்புகளும் பாத யாத்திரை ஒன்றை மேற்கொண்டனர். இனி ஒவ்வொரு வருடமும் இத்தகைய நினைவுகூரல் நிகழ்வொன்று நிகழவே செய்யும். இதன் மூலம் இஸ்லாமியத் தீவிரவாதம் என்ற விடயம் சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் நினைவு கூரப்படும். இதிலிருந்து இலங்Iகை முஸ்லிம்கள் ஒருபோதும் தப்பிவிட முடியாது.

**கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் அறிவிப்பு**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவித்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இதுவரை வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்படவில்லை - என்று மீண்டும் அரசுக்கு ஞாபகப் படுத்தியிருக்கிறார்.

இந்தத் தாக்குதலுக்கு முன்னர் புலிகளை அழிப்பதில் சிங்களப் படையினருடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தமிழரைவிட முஸ்லிம்களால் தமக்கு ஆபத்தில்லை என்ற அபிப்பிராயங்களை சிங்கள மக்கள் மத்தியில் இருந்தன. போருக்குப் பின்னர் முக்கிய அமைச்சுப் பதவிகளில்கூட முஸ்லிம்களை முன்னிறுத்தும் அளவுக்குச் சிங்களத் தலைவர்களின் ஆதரவு முஸ்லிம் தலைவர்களுக்கு இருந்தது. ஆனால், சஹ்ரான் சகல முஸ்லிம் தலைவர்களையும் தனது வளர்ச்சிக்குப் பயன்படுத்தியிருந்தார். அதே வேளை முஸ்லிம் தலைவர்களுக்குச் சஹ்ரான் என்ற மறைமுகத் தீவிரவாதி ஒருவர் தேவைப்பட்டார். இந்த இரு தரப்பு உறவு இருந்தாலும் சஹ்ரான் இவ்வாறான குண்டுத் தாக்குதலை நடத்தினால் தமது இருப்புக்கு அது ஆபத்தானாதக மாறும் என்பதை முஸ்லிம் தலைவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

இத்தாக்குதல் பற்றிய விடயங்கள் முஸ்லிம் தலைவர்களில் ஒருவருக்காவது தெரிய வந்திருந்தால் உடனடியாகச் சஹ்ரான் காட்டிக்கொடுக்கப்பட்டிருப்பார். அதன் மூலம் சிங்கள மக்களுக்கு ஏற்படவிருந்த பாரிய

அழிவைத் தடுத்ததற்காக மேலும் பாராட்டப்பட்டிருப்பார்கள்.

**தாக்குதலின் பின் முஸ்லிம்களின் நிலை**

தாக்குதல் நடந்து 4 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம் தலைவர்களினதும் முஸ்லிம் மக்களினதும் செல்வாக்கு மற்றும் முன்னேற்றம் ஆகியன என்றுமில்லாத அளவுக்குச் சரிந்திருக்கின்றன. உலகு முழுதும் பரவியிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்துடன் ஏதோ ஒரு வகையில் இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் சேர்த்துப் பார்க்கப்படுகின்றனர். பௌத்தத்துக்கு எதிராக இடம்பெறுகின்ற செயற்பாடுகளுக்காக முஸ்லிம்கள் பலர் அடையாளம் காணப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**சஜித்துக்குப் பின்னடைவு**


சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சியை வளர்த்தெடுக்க நினைத்தாலும் முஸ்லிம் தலைவர்களை அவர் சேர்த்து வைத்திருப்பதால் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். சஜித் பிரேமதாச மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசியல் செய்யும் விடயத்திலும் அவருடன் இருக்கும் முஸலிம் தலைவர்களே இடையூறாக உள்ளனர்.

**தற்கொலைத் தாக்குதல்கள்**

குண்டுத் தாக்குதலுக்குத் திட்டமிட்ட சஹ்ரான் முடிவில் தானும் குண்டை வெடிக்க வைத்து இறந்தார். அவரது சகோதரர், தந்தை உட்பட முழுக் குடும்பமும்



சாய்ந்த மருதிலுள்ள வீடு ஒன்றில் குண்டுகளை வெடிக்க வைத்து இறக்கும் நிலையும் ஏற்பட்டது. வெடிப்பதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளத்தில் தமது கருத்துக்களை அவர்கள் வெளியிட்டார்கள்.



**தாக்குதல் நடந்து 4 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம் தலைவர்களினதும் முஸ்லிம் மக்களினதும் செல்வாக்கு மற்றும் முன்னேற்றம் ஆகியன என்றுமில்லாத அளவுக்குச் சரிந்திருக்கின்றன**

இப்ராஹிம் என்ற வர்த்தகர் ஒருவரின் இரண்டு மகன்கள் இருவேறு தாக்குதல்களை நடத்திச் சாவடைந்தார்கள். அதன் பின் அவர்களின் வீட்டுக்குக் காவல்துறையினர் சென்றபோது இப்ராஹிமின் மருமகள் குண்டொன்றை வெடிக்க வைத்துத் தனது பிள்ளைகளுடன் இறந்துபோனார். சஹ்ரானின் இந்தப் பயங்கரவாத் தாக்குதல் மிகவும் துணிகரமாகத் திட்டமிடப்பட்டிருந்தது தெரிகிறது.இதன் பின்னர் தமிழருக்கு அடுத்து இலங்கையிலுள்ள சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமான சிங்களவருக்கு அடித்துவிட்டார்கள் என்ற வடு ஏற்பட்டது. இது இலகுவாக நீங்கப்போவதில்லை. தாக்குதல் விடயத்தில் விசாரணைகளுக்கு என்ன நடக்கப்போகிறது? யார் தண்டிக்கப்படப் போகிறார்கள்? என்பதுடன் இதனால் பாதிக்கப்பட்ட நிறுவனமயப்பட்ட கிறிஸ்தவம் சட்டபூர்வமான தண்டனையை எதிர்பாத்திருப்பது தெரிகிறது. எதிர்காலத்தில் இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் கிறிஸ்தவர்களின் நீதி கோரும் எதிர்பார்ப்பு மாறப்போவதில்லை. இறந்துபோன தாக்குதல்தாரிகள் போக மறைந்திருக்கின்ற சூத்திரதாரிகளைத் தேடும் படலம் தொடர்ந்துகொண்டேயிருக்கும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

49



## கேதலி என்பது கதலி அல்ல

சமஸ்கிருதச் சொல்லான கேதலி என்பதன் அர்த்தம் வாழை என்பதாகும். கேதலி என்பது வாழை மரத்தைக் குறிக்கிறது. "கேதலி பத்ரம்" என்றால் வாழை இலை. வாழை என்று அர்த்தப் படுகிற இந்தக் கேதலி என்கிற சொல் கதலி என்று ஒரு வகை வாழைப்பழத்தை மாத்திரம் குறிக் கும் சொல்லாக எம்மவர் மத்தியில் புழக்கத்தி லுள்ளது. இந்த விடயம் சமஸ்கிருத மொழியில் மந்திரங்களை ஓதிப் பூசை செய்கின்ற பிராமணர்களுக்கும் தெரி வதில்லை. மக்களுக்குச் சமஸ்கிருத மொழி பற்றிய விளக்கமில்லாததால் பூசைக்குரிய வாழைப் பழம் கதலி மட்டும்தான் என்ற நம்பிக்கை அவர்கள் மத்தியில் உள்ளது.

பூசைக்கு வைக்கும் கதலி வாழைப்பழங் களை வீட்டுக்குக் கொண்டுசென்று பெரும் பாலான இந்துக்களும் சைவர்களும் அவற் றைச் சாப்பிடுவதில்லை. கதலி வாழைப் பழத்தைப் புளி வாழைப்பழம் என்றும் அதைச் சாப்பிட்டால் சளிப் பிடிக்கும் என் றும்கூறி ஆடு, மாடுகளுக்குத் தீனியாக்குவது அல்லது குப்பையில் எறிவதே அநேகரின் வழக்கமாகவுள்ளது. கடவுளுக்குப் படைக்கப் பட்ட பின் அதைப் புனிதப் பொருளாகப் பார்ப்பதில்லை. இன்னொரு வகையில் பார்த்தால் மக்கள் சாப்பிட விரும்பாத வாழைப் பழத்தையே கடவுளுக்குப் படைக்கிறார்கள்.

பிராமணர்கள் மத்திய ஆசியப் பாலை வனப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட வர்கள். அங்கு வாழை மரம் வளர்வதில்லை. அவர்கள் அங்கிருந்து கால்நடையாக ஆப்கானிஸ்தானுக்கு வந்து பின்னர் ஹைபர் கணவாய்ப் பகுதிக்கூடாகக் கி.மு ஆயிரத்து 500அளவில் வடமேற்கு இந்தியாவுக்குள் வந்துசேரும் வரை வாழை மரத்தையோ அதன் இலையையோ, பழத்தையோ அவர்கள் கண்டிருக்க வாய்ப்பில்லை. இந்தியாவுக்குள் நுழைந்தபின்னரே அவர்களின் கண்ணில் வாழை பட்டிருக்க வாய்ப் புண்டு, பூசைக்காகக் கேதலி என்கிற மரத்தின் (எந்தவொரு வாழை மரத்தின்) இலைகளையோ, பழங்களையோ பாவிக்கலாம். அது கதலி என்ற தற்போது அர்த்தப்படும் ஒரு வகை வாழையை மாத்திரம் குறிப்பதல்ல.

# அ... ஆ... இ...?



நியூட்டன்

2013ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பரப்புரையின்போது மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அரியநேந்திரம் கிளிநொச்சியில் உரையாற்றியனார். அந்த உரையில், "நாம் ஆனாவில் ஆரம்பித்தோம் பின்னர் ஆவன்னாவில் நின்றோம் தற்போது ஈனாவில் நிற்கிறோம்" என்று குறிப்பிட்டார். அவர் தான கூறிய, அ என்பது அகிம்சைப் போராட்டம், ஆ என்பது ஆயுதப்போராட்டம் இ என்பது இராஜதந்திரம் என்பதாக அர்த்தப்படுத்தினார். தற்போது தமிழரிடம் "இ" இல்லாதுபோய் வெறும் மதப் போராட்டமாக மாற்றப்பட்டு அரசியல் தலைமைகளின் தலைமைத்துவம் இல்லாது செய்யப்பட்டுக் காவியுடுத்த மதத் தலைவர்கள் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

**அறவழிப் போராட்டம்**

அற வழியில் ஆரம்பத்தில் தமிழ் மக்களை அணி திரட்டிய தந்தை செல்வா அதனால் தீர்வொன்று கிடைக்காத நிலையில் இனித் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கைவிரித்தார். அதிகம் படித்த சட்ட வல்லுநரான அவர் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன முறிந்தபோது மாற்றுத் திட்டம் எதையும் தன் வசம் வைத்திருக்கவில்லை. வடக்குக் கிழக்குத் தழுவிய மக்கள் போராட்டங்களை ஒழுங்கு படுத்தவில்லை. ஒல்லாந்தர் காலத்திலிருந்து தமிழர்கள் அரச பதவிகளைக் குறிக்கொளாகக் கொண்டு தமது கல்வியைக் கற்றார்கள். பிரித்தானியர் காலத்தில் பிரித்தானிய நிர்வாகத்தைத் தடையின்றி நடத்த ரயில், தபால் திணைக்களங்கள், ஏனைய அரச திணைக்களங்களில் நிர்வாக உத்தியோகத்தர்களாக பணிபுரிந்தனர். இதனால் எமது நாடு, எமது நிலம், எமது மொழி என்ற எண்ணம் பிரித்தானியருக்குச் சேவகம் செய்து பழக்கப்பட்ட தமிழரிடம் இருக்கவில்லை.

பெருந்தோட்டத் துறையை விருத்தி செய்வதற்குக் கூடச் சிங்களச் சுதேச மக்கள் பிரித்தானியருக்கு ஒத்துழைக்காத நிலையில் இந்தியாவிலிருந்து கூலிகளை இறக்கவேண்டிய நிலை பிரித்தானியருக்கு ஏற்பட்டது. அந்தப் பெருந்தோட்டத் துறைகளில்கூட நிர்வாகப் பகுதிகளை யாழ்ப்பாணத் தமிழர்களே நிரப்பியிருந்தார்கள். அதன் நோக்கம் பிரித்தானியரின் ஆட்சிக்கு முட்டுக்கொடுப்பதாகும். இத்தகைய ஒரு பின்னணியில் தமிழரின் கல்வித்தரம் இருந்ததால் அரசுக்கெதிராகப் போராடும் திராணி தந்தை செல்வா போன்றவர்களிடம் இருக்கவில்லை. இவ்வாறிருக்க 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழீழம் என்ற கோட்பாட்டை முன்வைத்து இளைஞர்களைத் தூண்டினார் தந்தை செல்வா. தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றவர் ஆயுதம் தாங்கிப் போராட வழிவகுத்தார்.

**ஆயுதப் போராட்டம்**

30வருட ஆயுதப் போராட்டம் சிங்களத் தலைவர்களையும் சிங்கள மக்களையும் மிகவும் பாதித்தது. பயமுறுத்தியது. அதிலிருந்து மீள்வதற்காகச் சிங்கள மக்கள் எந்த விலை கொடுக்கவும் தயாராக இருந்தார்கள். அதன் பிரகாரம் மகிந்த ராஜபக்ச தலைமையில் பெரும் பிரயத்தனப்பட்டு 2009 இல் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. போரை முடிவுக்குக் கொண்டுவந்து வெள்ளை வேட்டி அகிம்சைத் தலைவர்களைத் தமிழருக்குத் தலைமை தாங்க வைத்ததால் போர் முடிந்து 13 ஆண்டு காலத்தை எவ்வித பிரச்சினையுமின்றிச் சிங்கள ஆட்சியாளர்களால் நடத்த முடிந்திருக்கிறது.

**காவியுடை அரசியல்**

அறவழிப் போராட்டம் மாறி ஆயுதப் போராட்ட

# "படையினரின் சடலங்களை பலாலியில் வைத்து எரித்தோம்..."

மொழியாக்கம்
கமலநாதன்



ஜி.டபிள்யு. ஹாமினி என்பவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர். ஹெமுனு படைப்பிரிவின் தகவல் தொடர்புப் பகுதியில் பணியாற்றியவர். வடக்குக் கிழக்கில் புலிகளுக்கு எதிராகப் பல போர்க்களங்களுக்கு முகம்கொடுத்த இவர் மன்னார் - சிலாவத்துறைத் தாக்குதல் தொடர்பில் பல முக்கிய தகவல்களை வெளியிட்டிருக்கிறார். இத்தாக்குதல் விடயத்தில் படைத் தளபதி டென்சில் கொப்பேஹடுவ முக்கிய வழிநடத்தலைச் செய்திருந்தபோதிலும் படையினருக்கு அதிக இழப்பு ஏற்பட்டது என்கிறார் ஹாமினி. 1991 நவம்பர் மாதம் 22 திகதி நடந்த மன்னார் - சிலாபத்துறைப் போர்ச் சம்பவம் குறித்து நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்துக்கு நளின் சமஹ ஹெலிங் (நளினுடன் நேரடி) என்ற நிகழ்ச்சியில் ஹாமினி தெரிவித்த கருத்துகள் இங்கு தரப்படுகின்றன.

நான் குருநாகல் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். யாழ்ப்பாணம் - தின்னவேலிப் பகுதியில் 13 படையினர் புலிகளால் கொல்லப்பட்ட பின்னர் எனது மாவட்டச்சூழல் வித்தியாசமாக மாறிவிட்டது. குருநாகல் மாவட்டத்திலிருந்தே மிக அதிகமானவர்கள் படையில் சேர்ந்தார்கள். புலிகளுக்கு எதிரான போர்களில் அதிகம் இறப்புகளைச் சந்தித்ததும் குருநாகல் மாவட்டமே. நான் அப்போது கொழும்பில் சாதாரண வேலை ஒன்றில் இருந்தேன். நாட்டுச் சூழலைக் கருத்தில் கொண்டு படையில் சேர முடிவெடுத்தேன். அம்மாவுக்கு அதில் விருப்பம் இல்லாததால் என்னை நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு படைத் தலைமையகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்களை இரு தடவைகள் அவர் ஒளித்துவிட்டார். அதன் பின்னர் 1985இல் படையில் சேர்ந்தேன். தியத்தலாவ, மாதுறு ஓயா பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற்றேன். ஜெமுனு படையணியில் சேர வேண்டும் என்ற விருப்பம் எனக்கிருந்தது. அதில் சேர்ந்தேன். பயிற்சி முடிந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபட்டேன். ஜெமுனு படையணியில் தகவல் தொடர்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது சிலாபத்துறை படை முகாம் புலிகளின் தாக்குதலுக்கு உட்படுகிறது என்று அறிந்து எமது படையணி அங்கு அனுப்பப்பட்டது. அப் போது எமது படையிணியின் பொறுப்பாளராக பிரிகேடியர் அக்னிமன இருந்தார்.

இத்தாக்குதல் தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுப்பவராக ஜெனரல் கொப்பேஹடுவ இருந்தார். சிலாவத்துறைக் களமுனைக்குச் செல்வதற்காக வவுனியா ஹாமினி மகாவித்தியாலயத்தில் உலங்கு வானூர்தி மூலம் இறக்கப்பட்டோம். பின்னர் கஜூவத்தை படை முகாமில் இறக்கப்பட்டோம். எமது படையணி அங்கு இறக்கப்பட்ட போதும் சிலாபத்துறைக்குச் செல்ல 4 நாள்கள் எடுத்தன. மாலை 5.30 மணியளவில் அங்கு போய்ச் சேர்ந்தோம். அங்கு கமல் குணரத்ன

மாகி அதுவும் வேண்டாம் என்ற நிலைக்கு இப்போது தள்ளப்பட்டுள்ள நிலையில் வெள்ளை வேட்டித் தலைவர்கள் பார்த்திருக்க, காவியுடை அரசியலுக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மீண்டும் அறவழி, சிலை திறப்பு, எதிர்ப்பு அரசியல் எனத் தமிழர் அரசியல் மலினப்பட்டு வருகிறது.

போர் முடிந்த பின் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய வெள்ளை வேட்டித் தலைவர்கள் சொத்துக்களைச் சேர்ப்பதில் வெற்றி கண்டனர். சிலர் தமது மனைவிமாரின் பெயர்களில் அதிக காணிகளைக் பதுக்கியதுடன் மணலுள்ள காணிகளைக் கூடத் தமது எதிர்கால மணல் வியாபாரத்துக்காகக் கையகப்படுத்தியுள்ளனர்.

இனிமேல் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை கோவில் கட்டுவதும் அவற்றைப் பாதுகாப்பதற்குமான அரசியலாக மாறிவிட்டது. வெள்ளை வேட்டித் தலைவர்களின் தூர நோக்கற்ற செயற்பாடே காவித் தலைவர்களைக் களமிறக்கியுள்ளது.

2013இல் அரியநேந்திரன் கூறிய இ என்பதும் இல்லாது போய்த் தமிழ் மக்களின் மையப் பிரச்சினைகளில் இருந்து வெளியில் வந்து அதை ஒரு மதப் பிரச்சினையாக அல்லது காவிகளின் பிரச்சினையாக மாற்றியிருப்பது சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கைமேல் பலனைக் கொடுத்திருக்கிறது. ஓரிடத்தில் புதிதாக அரசமரம் நடப்பட்டால் அதை எதிர்த்துச் சிவலிங்கங்களையும் இந்துக் கடவுற் சிலைகளையும் இரவிராக வைத்துவிடுவது என்ற நிலைக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை குறுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்த விடயம் மேலும் கூர்மையடைய வாய்ப்பிருக்குமே தவிர தமிழ் மக்களின் அரசியல் தீர்வு எட்டப்பட வாய்ப்பில்லை. காரணம் தமிழர்களின் தலைமைத்துவம் காவியுடுத்தவர்களின் கைக்கு மிக இலகுவாக மாறிவருகிறது.

(தற்போதைய படைத்தளபதி) நின்றார். புலிகளின் தாக்குதல்களால் படையினரில் அதிகம் பேர் இறந்து சடலங்கள் அதிகமாக அடுக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டேன். சடலங்களில் இலையான்கள் மெய்த்துக் கொண்டிருந்தன. அங்கு பணியிலிருந்த பிரிகேடியர் விஜயவிக்கிரம தலைமையிலான படைச் சிப்பாய்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு எமது படையணி களமிறக்கப்பட்டது. நாம் புலிகளின் பகுதியை நோக்கி முன்னேற வேண்டியிருந்தது. எமக்குப் பொறுப்பான களநிலை அதிகாரியாக கேணல் எஸ்.என். சேனவிரத்ன இருந்தார். அவர் போர் நுட்பங்கள் தெரிந்த கெட்டிக்காரன். புலிகளின் பகுதியை நோக்கி வேகமாக முன்னேற வேண்டிய நிலையிருந்ததால் அந்த முகாமில் கிடைத்த ரொட்டிகளை எடுத்து எமது காற் சட்டைப் பொக்கற்றுக்குள் அடைந்து கொண்டு சென்றோம்.

நாங்கள் புலிகளின் பகுதிக்குச் சென்றபோது இருட்டிவிட்டது. காலையில் அதிக பனி மூட்டமாக இருந்ததால் எமக்கு முன்னால் பத்து அடி தூரத்தில் இருப்பதைக்கூட அவதானிக்க முடியாத நிலை இருந்தது. புலிகள் எவ்வித எதிர்ப்பையும் காட்டது அமைதியாக இருந்து எமது துருப்புகளைத் தமது பகுதிக்குள் ஊடுருவ விட்டனர். பின்னர் திடீரெனக் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது புலிகளுக்கு எதிரான வானூர்தித் தாக்குதல்களை நடத்துவதற்கான கட்டளையை நிலத்திலிருந்து நான் வழங்கினேன். எனது குரல் தெளிவாகவும் உரத்ததாகவும் இருந்ததால் வானோடி ஒருவர் என்னை அந்த முகாமின் கட்டளை இடும் அதிகாரி என நினைத்துச் சேர் சேர் என்று அழைத்துக் கதைத்தார். அதை எனது கட்டளையிடும் அதிகாரியிடம் கூறினேன். உன்னுடைய பாணியிலேயே தொடர்ந்தும் கட்டளையிடு. நீ யாரேன்பது அவர்களுக்குத் தேவையில்லை என்று அவர் சொன்னார்.

**கேமா பிரேமதாசவின் செயலால் பாதிக்கப்பட்டோம்**

போர் நடந்துகொண்டிருந்தபோது உடனடியாக மீட்புப் பணிக்கான உலங்கு வானூர்தியை அனுப்புமாறு வான் படைத் தலைமையகத்துக்கு வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் பிற்பகல் 2.30மணிக்கே அந்த உலங்கு வானூர்தி நாமிருந்த பகுதிக்கு




வந்தது. அங்கு வந்தபோது எல்லாமே முடிந்திருந்தது. காயப்பட்டவர்களில் பலர் இறந்திருந்தார்கள். உரிய நேரத்துக்கு அது அங்கு வர முடியாமைக்குக் காரணம், அப்போதைய அரசதலைவர் ரணசிங்க பிரேமதாசவின் மனைவி கேமா பிரேமதாச அனுராதபுரம் சிறிமகா போதியைத் தரிசிக்கச் செல்வதற்காக அந்த உலங்கு வானூர்தியைப் பயன்படுத்தியமை என்று அறிந்தோம். அங்கிருந்து அவரை மீண்டும் கொழும்புக்குக் கொண்டுபோய் இறக்கிய பின்னர் புறப்பட்டு வந்திருந்தது அந்த வானூர்தி.

**போல் மைப்பின் படி இலக்குகளை அறிவித்தேன்**

சிலாபத்துறைப் போர் நடந்த காலத்தில் நில வரைபடத்தில் புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிகளை அடையாளம் கண்டு அந்தப் பகுதியை வரைபடத்தில் வட்ட மிட்டுக் காட்டி அவற்றுக்குத் தனியான இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதையொத்த வரைபடத்தை வானோடிகளிடமும் வழங்கினோம். அதன் படி மிக நெருக்கடியான களநிலையில் நின்ற படி நான் இலக்குகளை அறிவித்துக் கொண்டிருந்தேன். டென்சில் கொப்பேஹடுவ, படைத் தளபதி ஆகியோர் எனது கட்டளைகளைச் செவிமடுத்தவாறு இருந்தார்கள்.

தாக்குதல் முடிந்த பின்னர் தள்ளாடி முகாமில் தங்கியிருந்த படைத் தளபதி நான் இருந்த முகாம் பகுதிக்கு உலங்கு வானூர்தி ஒன்றை அனுப்பி என்னை அங்கு வருமாறு பணித்தார். நானும் எனது கட்டளையிடும் அதிகாரியும் அங்கு சென்றபோது தளபதி என்னைக் கட்டியணைத்து எனது துணிகரமான செயலைப் பாராட்டியதுடன் அந்த இடத்திலேயே எனது பதவியையும் உயர்த்தினார். அதேவேளை இவ்வாறான துணிகரமான நபர்கள் இருக்கும் வரை நாங்கள் பயப்பிடவேண்டிய அவசியமில்லை என்று என்னை அழைத்துச் சென்ற கட்டளையிடும் அதிகாரிக்குக் கூறினார். போரில் கொல்லப்பட்ட ஜெமுனு படைப்பிரிIவைச் சேர்ந்த 28 சிப்பாய்களின் உடல்களைப் புலிகள் கைப்பற்றிக் கை கால்களை வெட்டிக் குடலை எடுத்துச் சடலங்களின் கழுத்தில் மாலைபோல் போட்டுப் பொதி செய்து பலாலியில் கையளித்திருந்தார்கள். சிலவத்துறை முகாமில் கொல்லப்பட்ட அந்த 28 படையினரின் சடலங்களில் ஒருசிலவற்றை மட்டும் கொழும்புக்கு அனுப்புவது என்று ஒரு சிலரால் முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவை நான் உட்பட வேறு பலர் எதிர்த்தோம். சடலங்களைக் கொண்டு செல்வதானால் 28 சடலங்களையும் கொண்டு செல்ல வேண்டும் ஓரிரு சடலங்களைக் கொண்டு செல்ல வேண்டாம் என்றோம்.

டென்சில் கொப்பேஹடுவ மிகவும் கடுமையான ஓர் அதிகாரி. சிலாபத் துறைத் தாக்குதலின்போது அங்கு பொறுப்பாக இருந்த கமால் குணரத்னவுக்கு உரிய முறையில் ஒத்துழைக்காத - பொறுப்பற்று நடந்துகொண்ட படை உயரதிகாரி ஒருவரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றி அனுராதபுரம் படை முகாமில் சிறையிலடைக்கப் பணித்தார்.




தர்மராசா

# சிறைக்குள்...

## "காசுள்ளவர்கள் ராசா மாதிரி வாழ முடியும்..."

கொழும்பு குற்றத் தடுப்புச் சிறைச்சாலையில் (கொழும்பு றிமான்ட் சிறைச்சாலை - ரி.ஆர்.பி) காம்பறாப் பாட்டியை (நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அச்சுக் கைதி) அணுகித் தனக்குச் சிறைச்சாலை அறை ஒன்றைப் பெற்றுத் தருமாறு கேட்டபோது, அவர் 2ஆயிரத்து 500ரூபாவுக்குத் தனக்குச் சிறை அறை ஒன்றை ஒதுக்கித் தந்தார் என்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரைச் சந்தித்தபோது எனக்குக் கூறினார். அங்குள்ள நீண்டகாலச் சிங்களக் கைதிகள் புதிதாக அந்தச் சிறைக்குச் செல்பவர்களை அறைக்குள் அனுமதிக்கமாட்டடார்கள். ஆனால், அவர்களுக்குப் பணம் கொடுத்து அறை ஒன்றைப் பெற்றுக் கொண்டால் அதில் பாதுகாப்பிருக்கும். அங்கு எல்லாக் கைதிகளையும் நெருக்கமாகப் போட்டு அடைப்பதால் சிறை விறாந்தையில்தான் அனைவரும் படுக்க வேண்டியிருக்கும். இரவில் கழிப்பறைக்குப் போய் வருபவர்கள் தாறுமாறாக மிதித்துக்கொண்டு போவார்கள். வேறு தெல்லைகளும் அதிகம். ஆனால், காம்பறாப் பாட்டியின் அனுசரனை இருந்தால் அங்கு யாரும் வாலாட்ட முடியாது என்றார்.

குதிரைத் தொழுவமாக இருந்து சிறைச்சாலையாக மாற்றப்பட்டதே கொழும்பு றிமான்ட் சிறைச்சாலை. மிகப் பழைய குதிரைத் தொழுவமாகிய அங்குள்ள எல்லா அறைகளும் குதிரைகளைக் கட்டுவதற்காகக் கட்டப்பட்டவை. அறைகளின் உட்பக்கமாக இரண்டு சிறிய தொட்டிகள் குதிரைக்கு உணவு, தண்ணீர் வைப்பதற்குக் கட்டப்பட்டுள்ளன. அந்தத் தொட்டிகளில் பாட்டிக்காரர் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார்கள். அதற்கு 20ரூபா கொடுக்க வேண்டும். ஒரு தடவை புகை மூலம் உள்ளிழுக்கக்கூடிய கெரோய்ன் சரை ஒன்று அந்தச் சிறைச்சாலைக்குள் பத்து ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்தது. தொட்டிக்குள் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றுவதால் கிடைக்கின்ற அந்தக் காசை அந்தக் கைதி 2சரைகளை வாங்குவதற்காகப் பயன்படுத்துவார். பணம் கொடுக்காமல் அவற்றை வாங்கி வைத்திருந்து ஒன்று அல்லது இரண்டைக் கூலியாகக் கொடுப்பவர்களும் உண்டு. கெரோய்ன் சுற்றப்பட்ட அந்தச் சிறிய சரைகளைச் சிங்களத்தில் ஹாலி என்பார்கள்;.

# திசை மாறும் பயணிகள்...!




சூடாமணி

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அதிகம் பங்களிப்புச் செய்யும் துறாக இருப்பது சுற்றுலாத்துறையே. கடந்த ஆண்டில் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். முன்பெல்லாம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தால் இலங்கை முழுதும் பயணிக்கும் வழக்கம் இருந் தது. ஆனால் தற்போது இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை வடக்குக் கிழக்கு மாகாணங்களின் பக்கம் பார்க்க விடாமல் இலங்கையின் தென்பகுதிக்குள் முடக்கிவிடுகின்ற நிலை வளர்ந்து வருகிறது. இதன் மூலம் தென்பகுதி அதிக பொருளாதார வளத்தைப் பெற்று வருகிறது.

**சுற்றுலா மையங்கள்**

2022ஆம் ஆண்டின் பின் அரையாண்டிலும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருக்கின்ற போதிலும் அவை நாட்டின் முழு மக்களுக்கும் - பிரதேசங்களுக்கும் நன்மை பயப்பதாக இல்லை. வெளிநாடுகளில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தற்போது மத்தள வானூர்தி நிலையத்தில் இறக்கப்படுகின்றனர். அதன் பின்னர் நேராகத் தென்னிலங்கைச் சுற்றுலா மையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஏற்கனவே சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் அந்த நாட்டு அரசுகளின் ஏற்பாட்டுடன் இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் அனுபவிக்கக்கூடிய விடயங்கள், பயணிக்கக்கூடிய பகுதிகள் எனக் குறிப்பிட்ட தென் பகுதி மையங்களுக்கே விளம்பரங்களும் கொடுக்கப்பட்டிருப்பதால் வருகின்ற பயணிகள் அவற்றை நாடிச் செல்கின்றனர். தென்பகுதிக் கடற்கரைகளான பெந்தோட்ட, மிரிஸ,

பாட்டிக் காரரிடம் ஏதாவது ஓர் அலுவல் செய்து தருமாறு கேட்டால் 'ஹாலி ரெண்டு தருவாயா...?" என்றுதான் பேரம் பேசுவார்கள். காலையில் அவர்களுக்கு இரண்டு ஹாலிகளுக்குக் காசு கொடுத்தால் சிறிய தொட்டிக்குள் தண்ணீர் நிரப்பி விடுவார்கள். நாம் அறைக்குள்ளேயே நின்று குளிக்கலாம். குளித்த தண்ணீரை வெளியேற்றுவதற்குப் பத்து ரூபா கொடுத்தால் போதும். உடனேயே சுத்தமாகத் துடைத்துக் கொடுப்பார்கள். அங்கு காசுள்ளவர்கள் ராசா மாதிரி வாழ முடியும் என்று கூறினார்.

போகம்பரைச் சிறையின் மேல் தளத்திலுள்ளவர்கள் கீழேயிருப்பவர்களுக்குக் காசு எறிந்து கெரோய்ன் சரைகளுக்காகக் காத்துக் கிடப்பார்கள். அவர்கள் அதற்காக ஏங்கித் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கத் துன்பமாக இருக்கும். ஓரிரு செக்கன்களுக்குள் அந்தப் போதைப் பொருளை உடம்பில் உள்வாங்கிவிடத் துடிப்பார்கள். இதற்காகத் தாம் தயாரிக்கும் கைவினைப் பொருள்களை அறா விலையில் விற்கவும் துணிவார்கள். நூறு ரூபா கோருகிற பொருளுக்கு 20ரூபா கொடுத்தாலும் உடனே தருவார்கள். ஏனெனில் வியாபாரிகளிடம் கெரோய்ன் சரைகள் தீர்ந்துவிடுவதற்கு முன்பு அவற்றை வாங்கிவிடவேண்டும் என்பதற்காகவே. சில கைதிகள் சில கைவினைப் பொருள்களைக் கிழமைக் கணக்கில் மெனக்கெட்டுக் கஸ்ரப்பட்டுச் செய்திருப்பார்கள். அந்தக் கஸ்ரங்களை உணராது கிடைக்கும் விலைக்கு விற்றுவிட்டுக் கொரோய்ன் சரைகளை வாங்கத் துடிப்பார்கள். அவர்கள் குறிப்பிட்ட போதைப்பொருளுக்கு எப்படியெல்லாம் அடிமையாகிவிட்டார்கள் என்பதையே அவை காட்டுகின்றன. கெரோய்ன் முடிந்து விட்;டது என்று சொன்னால் ஒன்றாவது எடுக்க முடியாதா என்று கெஞ்சிக் கேட்பார்கள். அந்தத் தருணத்தில் பத்து ரூபாச் சரையை 20ரூபாவுக்கு விற்றால்கூட வாங்கத் துடிப்பார்கள். இவ்வாறான காலகட்டத்தில் கெரோய்ன் சரையின் சந்தை நிலவரமும் சற்று உயர்வாக இருக்கும்.

(தொடரும்)

உனவட்டுன, ஹிக்கடுவ, வெலிகம, தங்காலை, மாத்தறை, கொக்கல, கிரிந்த ஆகிய இடங்களைப் பார்க்கும் ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. மிக அழகிய இயற்கைக் கடற்கரைகளான குறித்த பகுதிகளில் அதுசார்ந்த விடுதிகளும் தங்குமிடங்களும் பெருமளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இதனால் நேரடி, மறைமுக வருமானமீட்டும் வழிகள் அதிகரித்துள்ளன. இதனால் தென்பகுதி மக்களின் வருவாய் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

**ஏனைய சுற்றலா மையங்கள்**

படகுச் சவாரி மற்றும் நீர் விளையாட்டுக்களுக்குச் உகந்த இடமாகப் பெந்தோட்ட ஆறு காணப்படுகிறது. மிரிஸ கடலில் டொல்பின், சுறா போன்ற கடல் வாழ் உயிரினங்களைக் கப்பலில் சென்று பார்க்கும் ஏற்பாடுகள் உள்ளன. இவை தவிர முல்கிரிகல, காலிக் கோட்டை (இலங்கையின் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டைகள் பல இருக்கிற போதிலும் இன்று வரை இயங்கு நிலையில் இருக்கும் ஒரேயொரு கோட்டை இது தான்), சிங்கராஜ வனம், டச்சுக் காலத் தேவாலயம், குமண தேசியப் பூங்கா, றேட்டில் கச்சேரி, ஹம்பாந்தோட்ட - பந்தல தேசியப் பூங்கா எனப் பல விடயங்கள் சுற்றுலாப் பயணிகளுக்காகத் தயார்ப்படுத்தப்படும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.




நிலமை இவ்வாறிருக்க, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தென் பகுதியை நோக்கிச் செல்வதாக இருந்தால் பெரும்பாலும் கதிர்காமமே அவர்களின் தெரிவிடமாக இருக்கிறது. மேற்கூறப்பட்ட சுற்றுலா மையங்கள் பலவற்றுக்குச் சென்றதேயில்லை. ஆனால், சிங்கள மக்கள் நாட்டின் நாலா புறங்களில் இருந்தும் இந்தப் பகுதிகளுக்குச் சென்றுவருகிறார்கள்.




**பாலியல் தொழில்**

பௌத்த மதத்தைப் பின்பற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளில் பாலியல் தொழில் விருத்தியடந்துள்ளது. அதேபோன்றதொரு நிலை தென்னிலங்கையிலும் உள்ளது. பௌத்த மதமும் அதுசார்ந்த கலாசாரப் பின்னணியும் இத்துறையில் பெண்கள் ஈடுபடுவதற்குத் தடையாய் இருக்கவில்லை. இத்தகைய கலாசாரப் பின்னனி ஒன்று போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் இருந்தது. இதனால் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளிடமிருந்து அதிக அந்நியச் செலாவணிகளை ஈட்டும் வாய்ப்பும் உள்ளது.

**சுதேச மருத்துவம்**

தமிழர் மத்தியில் சுதேச வைத்திய முறைகள் பல உள்ள போதிலும் தமிழ் மக்களே அவற்றைப் பின்பற்றுவது அரிதாகவுள்ளது. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் சுதேச மருத்துவத்தின் பயன்பாடு மிக அதிகமாகவுள்ளது. இதுபற்றிச் சுற்றலாப் பயணிகளுக்குக்கூட எடுத்துக்கூறப்படுகிறது. இங்கு வருவதற்கு முன்னரே பயணிகளின் நாடுகளில் விளம்பரப்படுத்தப்பட்டிருப்பதால் பல பயணிகள் இந்த வைத்திய சேவையைப் பெறுவதற்காகவும் மசாஜ் போன்ற சுதேச வைத்திய வசதிகளைப் பெறுவதற்கும் இங்கு விரும்பி வருகின்றனர். இதற்கு இலங்கைச் சுற்றுலாத்துறை ஊக்க ஏற்பாடுகள் பலவற்றைச் செய்துகொடுத்திருக்கிறது.




**புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்**

இவ்வருடம் நடந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சிலவற்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உள்ளீர்க்கப்பட்டிருக்கின்றனர். கிராமிய விளையாட்டுகள் பாரம்பரிய உணவுகள் என இலங்கையர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் பலவற்றை அறியும் வாய்ப்பும் அதன் மூலம் கிராம மக்கள் பணம் சம்பாதிக்

கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இவற்றைவிட வெளி நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்ற யூரியூப் வலைத்தள வாசிகள் இலங் கையின் அழகைத் தமது நாடுகளில் பரப்புகின்ற நிலையும் உல்லாசப் பயணிகளை மேலும் கவர்ந்திழுக் கிறது. சீனாவின் சுற்றுலாப் பயணி யான ஜூலியான என்பவர் இலங் கைச் சுற்றுலா குறித்துச் சில பதிவு களை இட்டிருக்கிறார். எது எப்படி யிருப்பினும் இலங்கையின் தற்போ தைய சுற்றுலாத்துறையின் ஏற்பா டுகள் தென்பகுதியை மிக அதிகமாக வளர்ச்சியடைய வைத்திருக்கின்றன. ரணில்விக்கிரமசிங்கவைத் தொடர்ந் தும் அரசதலைவராக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தென் பகுதிச் சிங்கள மக்களின் மனங்களில் நிலையில் கொண்டு வந்திருக்கிறது.

# மீட்டல்...

07



துன்பானந்த சுவாமி

பெரிய இடங்களால் சிபாரிசு செய்யப்பட்டு அனு மதிக்கப்பட்ட ஒரு பண்டம் நல்லதாகவே இருக்குமென்கிற நம்பிக்கையுடன் பல விடயங்களைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள பழக்கப்படுத்தப்பட்டோம். இவ்வாறு பழக்கம் மாற்றப்பட்ட இன்னொரு முக்கியமான பண்டம் குடிநீர் என்பது நாம் கவனிக்கப் பெருமளவில் தவறிக் கொண்டிருக்கும் விடயங்களில் ஒன்று. இதிலும் அறி வியல் என்கிற முகத்திரையுடனான அறிவீனம் செல் வாக்குச் செலுத்துவதை உணர முடிகிறதா? எண்ணிப் பார்ப்போம். உள்நுழைய உள்நுழைய அதற்குள்ளாக ஏராளம் விடயங்கள் வெளிப்படும் என்பது உண்மை.

ஆற்று நீரையும் ஊற்று நீரையும் தேக்கிய நீரையுமே நாம் எமது தேவைகளுக்காக காலங்காலமாகப் பயன் படுத்தி வந்துள்ளோம். நாம் உள்ளெடுக்கும் நீரானது தான் கொண்டிருக்கும் கனிமங்களால் எமது ஆரோக் கியத்தைப் பேண உதவியது - உதவுகிறது. அதில் சில வேண்டத்தகாத அல்லது தீய கூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவை எமது உணவுப் பழக்கத் தால் சீராக்கம் செய்யப்பட்டன அல்லது சமனிலைப்படுத் தப்பட்டன. நீரானது மழையாக வானிலிருந்து வீழ்வது தொடக்கம் எம்முட் செல்லும் வரை ஏராளமான இய ற்கை மாறுதல்களுக்கு உட்படுகிறது.

அவ்வகையான மாற்றங்களில் மூலிகைகள், இயற் கைக் கனிமங்கள், இயற்கை நுண்ணுயிரிகள் எனப் பங் கெடுத்துக் காலமெடுத்து தன்னியல்பாக நீரானது வள மாக்கப்பட்டது. அவ்வாறான நீரையே காலங்காலமாக எம் முன்னோர்கள் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். எமது பகுதிகளில் அனேகமாகக் கிணற்று நீரும் பிற இடங்களில் ஆற்றுநீர், குளத்துநீர் என்பனவுமே குடிநீருக்கான மூலங்கள். இப்போது? போத்தல் நீர்.

இங்கேதான் எமது பொதுப்பட்டறிவு மழுங்கடிக்கப்பட் டுச் செயற்கை மட்டையறிவு திணிக்கப்பட்டிருக்கிறதைக் கண்கூடாகத் தெளிவாகப் பார்க்கமுடிகிறது. ஓர் அறி வாளி(யாகத் தன்னை முன்னிலைப் படுத்துபவர்) தான் அறிவார்ந்து எப்படி மின்வடிகட்டியைத் தள்ளுபடி விலையில் வீட்டிற்குப் பொருத்திப் பயன்படுத்துகிறேன் என்று புழுகிக்கொண்டிருந்தார். கிணற்று நீர் தொடர்பான ஆதாரமேதுமற்ற குற்றச் சாட்டுகளையும் முன்வைக்கத் தவறவில்லை. இம்முறையில் தண்ணீரில் எந்தமாறுதலும் ஏற்படாதென்றுவேறு வரிக்குவரி குறிப்பிட்டவர் குறித்த வடிகட்டியினது ஒரு பாகத்தை மட்டும் ஆறு மாதத்துக் கொரு முறைமாற்றினால் போதும் என்று நிறுத்தினார்.

அதுவரை கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் 'அதுசரி நீங்கள் சொல்லுறமாதிரி மாற்றங்கள் ஏற்படாட்டி பேந் தேன் வடிகட்டி? கிணத்திலையிருந்து அள்ளி வாளி யோடை வைச்சுக் குடிக்கலாமே?' என்றார். இன்னொரு வர் 'மாற்றங்கள் ஒண்டும் இல்லையெண்டால் ஆறு மாதத்திலை அதின்ரை பாட்ஸ் ஏன் பழுதாகுது?'

## இந்த வாரச் சொல்

# வெள்ளணை, காத்தாளை

யாழ்ப்பாணக் கிராமங்கள் பலவற்றில் இன்றும் வழக்கிலுள்ள பேச்சு வழக்குச் சொற்களில் வெள்ளணை, காத்தாளை ஆகியன முக்கியமானவை. கிராமங்களில் அதிகம் உச்சரிக்கப்படும் வார்த்தைகளாக இன்றும் இவை இருப்பது இந்த வார்த்தைகளுக்கேயுரிய சிறப்பையே காட்டுகின்றன. இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் அந்த வார்த்தைகள் கிராமத்தவர்களின் அடையாளங்களாக இருக்கின்றன.

"வெள்ளணை நேரத்தோட போனாத்தான் வெயிலுக்கு முதல் வேலைய முடிக்கலாம்"

இவற்றில் வரும் வெள்ளணை என்பது காலை நேரத்தைக் குறிக்கிறது. அத்தோடு சற்றுநேரத்துக்கு முன்னர் அல்லது முற்கூட்டியே நடந்ததையும் கூட இந்த வெள்ளணை என்கிற வார்த்தை மூலம் குறிப்பிடுகிறார்கள்.

"அவர் வெள்ளணையே சொல்லிப் போட்டார். உனக்குத்தான் கேட்கயில்லை"

இதைப்போலவே காத்தாளை என்கிற வார்த்தையும் பயன்பாட்டிலுள்ளது.

"காத்தாளைக்குக் கோயிலுக்குப் போகவேணும். நேரத்துக்குப் போய்ப் படுங்கோ"

"அவர் நாளைக்குக் காத்தாளைதான் வருவாராம்"

இவ்வாறாக இந்த வெள்ளணை, காத்தளை ஆகிய பேச்சு வழக்குச் சொற்கள் அதிக சந்தர்ப்பங்களில், அதிகளவில் இன்றுவரை கிராமத்தவர்களால் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

என்றார். அறிவாளியின் நிலை எப்படியிருந்திருக்கும் என்பதை நினைத்துப்பாருங்கள். இப்படித்தான் விற்பனை செய்கிறார்கள். அவர்களால் நியமிக்கப்பட்ட முன்கூறப்பட்டவர் போன்ற சலுகைகளால் ஈர்க்கப்பட்டவர்கள் எந்த விதமான குற்ற உணர்ச்சியுமின்றிச் சிபாரிசு செய்கிறார்கள்.

நிலத்தடிநீர் மாசு என்கிற பூதத்தைக் கிளப்பிப் போத்தல்நீர் விற்பனைக்கு அடித்தளமிட்ட பல்வேறு தரப்பினரும் அடையாளம் காணப்பட்ட சம்பவம் கண்முன்னே சில ஆண்டுகளுக்கு முன் நடந்ததை நினைவில் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள், மருத்துவத்துறையினர், சுகாதாரத் துறையினர், சட்டத்துறையினர் என வெளிப்படுத்தப்பட்டவர்களை மறந்திருக்கமாட்டீர்கள் என நம்புகிறேன். நிலத்தடிநீர் எம்முன்னோர் காலத்தினது தரத்தில் இப்போது இல்லை என்பது மாற்றுக்கருத்துகளுக்கு இடமின்றிய உண்மை.

இதற்குக் காரணம் முன்பிறவிப்பயனுமில்லை. வேற்றுக்கிரக வாசிகளுமில்லை. எமது எதிரிகளோ துரோகிகளோவு



மல்ல. நாம் ஒவ்வொருவரும்தான். மண்ணிற்கு நாம் சேர்க்கிற செயற்கை இரசாயங்கள் கழுவுப்பட்டு நீர்மூலங்களைச் சென்று சேர்கின்றன். நீர்ச் சமநிலையை மாற்றுகிறோம். நிலத்துக்குட் செல்லும் நீரினது அளவை அனேகமாக பல்மடங்கில் குறைத்து கடலுக்கு செலுத்துகிறோம். இதனால் நிலத்தடி நீரினது அடர்த்தி அதிகரிக்கிறது. தீமிகளின் செறிவு கூடுகிறது. குடிப்பதற் கேதுவற்றதாக மட்டுமன்றி சமையல் தேவைகளுக்கும் பொருந்தாதது ஆகிறது. பயிர்ச் செய்கைகளிற்கும் பொருத்தமற்றதாக மாறுகிறது.


இவை இப்படியிருக்க பில்ற்றர் தண்ணீர் வியாபாரம் வேகமாக வளர்ந்துவரும் துறையாகி விட்டது. கொண்டாட்டங்களில் போத்தல்த் தண்ணீர் அதி அத்தியாவசியப் பண்டமாக்கப்பட்டு விட்டது. போத்தலுக்குள் இருக்கும் நீரினது மூலம் எது? போத்தலில் நீரடைக்கும் செயலொழுங்கென்ன? எப்போதாவது அறியமுற்பட்டி ருக்கிறோமா? செம்பிலிருக்கும் நீரை எட்டிப் பார்த்து மணந்து பார்க்கிறோம். போத்தல் தண் ணீரை அப்படியே வாயை வைத்து உறிஞ்சிக் குடிக்கிறோம். காரணம் போத்தல் நீர் பற்றிய அதீத நம்பிக்கையே. எதை நம்புகிறோம்? பேச நிறைய உண்டு. பேசலாம்.

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

05




இத்தம்பதியினரின் ஏக புதல்வன் பிரித்தானிய ஆளுநர்கள் பலரின் கீழும் பணி புரிந்த புகழ்பெற்ற அரசு அதிகாரியும் சிறந்த எழுத்தாளருமாவார். "ரிமெம்பரன்ஸ் யெஸ்டர் டேய்ஸ்" எனும் பெயரில் இவர் தனது சுயசரிதையை எழுதினார். துரதிர்ஷ்டவசமாக அவருடைய பரம்பரை பற்றிய எந்தவொரு தகவலும் அந்நூலில் சேர்ந்திருக்கவில்லை. பெருஞ்சிறப்புக்குரிய அவரின் பெயர் சேர் தொன் சொலமன் டயஸ் அபேவிக்கிரம ஜயதிலக்க செனவிரத்ன இராஜகருணா கடுகரலு பண்டாரநாயக்க என்பதாகும். அவர் "நைட்" பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

நீலப்பெருமாள் பரம்பரையிலிருந்து வரும் இக்கிறிஸ்தவ வம்சாதிபதிக்கு பிலிப்ஸ் மற்றும் ஸ்க்ரோப் பரம்பரையினரிடத்தும் உரிமை இருக்கிறது. இலங்கையின் வரலாற்றுப் பாதையை மாற்றுவதற்கு விதியினால் தீர்மானிக்கப்பட்டதாகத் தானே தீர்மானித்துக் கொண்டுள்ள, பிற்காலத்தில் தனது மூதாதையர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் ஆடையணிகள் மாத்திரமல்ல, அவர்கள் கைக்கொண்டிருந்த மத நம்பிக்கையையும் கைவிட்ட நமது பிரதமர் சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்க மேலே குறிப்பிட்ட "நைட்" பட்டம் பெற்ற கிறிஸ்தவ வம்சாவளியின் ஏக புத்திரன் ஆவார். இலங்கையின் அனைத்து உயர்வம்சங் களும் அவர் உடம்பில் இருக்கக்கூடும். அவர் உண்மையாகவே இலங்கைச் சமூகத்தை உருவாக்கும் தன்னிகரற்ற தலைவராக இருக்கக் கூடும்.

ஒற்றுமை நாடி நாளங்களிலேயேயன்றி வெற்று வார்த்தைப் பின்னல்களில் இல்லை என ஒருமுறை இரவீந்திரநாத் தாகூர் கூறியிருந்தார்.

## தம்பி முதலியின் உரிமை (ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரை)

புகழ்பெற்ற மக்கள் தலைவராகக் கருதப்படும் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்தன வெளியிட்டுள்ள சில கருத்துக்களையும் அவற்றின் சரி பிழையையும் ஆராய்வது

**யுக யுகாந்திரங்களாக மனித குலம் பயணித்தது சமமான பாதையிலேயே. மனித குலத்துக்கு உரித்தான பூர்வீக உரிமைகள் நம் அனைவருக்கும் பொதுவானவை**

முக்கியமாகும். 2500ஆண்டுகள் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள சிங்கள இனம் தனது உன்னதமான பாரம்பரியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உயிரைப் பணயம் வைத்துப்போராட வேண்டிய காலம் நெருங்கியுள்ளது என அவர் சதீபத்தில் தெரிவித்துள்ளார். 1957 ஜூன் 13ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது.

ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் தலைவர்களைத் தெரிவுசெய்யும் வழமையான வழிமுறைகளை ஆவேசத்துடன் புறந்தள்ளி, அதற்கெதிராகப் போராடத் தயாராகும் ஜெயவர்த்தன தன் உன்மத்த போர் வெறியை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார். சிவில் சட்டங்களை மீறும் இயக்கமொன்றை முன்னெடுக்கப்போவதாக அவர் அச்சுறுத்துகிறார். இத்தகைய வீண் மமதையினால் நாட்டை எங்கே கொண்டு செல்லப்போகிறார் என்பது கேள்விக்குறியே. நாட்டின் சட்டங்களை மீறும் இயக்கமொன்றுக்குத் தான் தலைமை வகிக்கப்போவதாகக் கூறுவதன் மூலம் அவர் அளவற்ற மகிழ்ச்சி அடைவார் என்பதில் மாத்திரம் ஐயமேதுமில்லை.

எனினும் தேசிய இயக்கமொன்றின் தலைமையை இவ்வாறு தானாகவே தன்வசம் எடுத்துக்கொள்வதற்கு அவருக்குள்ள உரிமை குறித்து ஐயமேற்படுகிறது. தெய்வீக வரத்தால் கிடைக்கப்பெற்றதாக அவர் கருதி வந்த களனி ஆசனத்திலிருந்து அவர் தூக்கி எறியப்பட்டமை சமீபத்தில் தான் நடந்தது. 2500 ஆண்டுகள் பழமையான சிங்கள இனத்தின் மொழியையும் மதத்தையும் பாதுகாப்பதற்காக அனைத்து எதிர்ப்புக்களையும் மீறிப் போராடவுள்ளதாக வீராப்புப் பேசும் இவர் யார்??

ஜூனியஸ் ரிச்சரட் ஜெயவர்த்தனவின் 2500ஆண்டுகால பாரம்பரியத்தை ஒரு கணம் புறம் வைப்போம். அவர் சிங்களவரானது எப்படி, எக்காலத்திலிருந்து, பௌத்தரானது எப்படி, எக்காலத்தில், இப்போது அவர் அணிந்திருக்கும் தேசிய உடையை அணிய ஆரம்பித்தது எப்போதிருந்து, எந்த நோக்கத்துக்காக, மார்க்ஸியத்தின் விரோதியானது எவ்வாறு, எதற்காக, புகைத்தலைக் கைவிடும் கொள்கைக்கு மாறியது ஏன், எப்போதிருந்து ஆகிய விவரங்களைத் தெரிந்து கொள்வது தலையாயது ஆகும்.



இவ்வாறு ஒருவரின் கடந்த காலத்தை அலசி ஆராய்வதென்பது விரும்பத்தக்க ஒன்றல்ல. ஒருவர் யார், எவரென்பது எவருக்கும் முக்கியமானதொன்றல்ல. எவரும் அதுகுறித்து ஒரு தம்படிக்கேனும் கணக்கெடுக்கப் போவதில்லை. உதாரணமாகப் பெரேராவின் முன்னோர்கள் யாவர், அவர் எத்தகைய அரசியல் கருத்தைக் கொண்டிருக்கிறார் போன்ற விவரங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு எவருக்கு எந்தத் தேவையுமில்லை. ஆனால், பொது மக்களின் நலனுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிப்பதாகக்கூறிக்கொண்டு, மக்கள் தலைவராகத் தோற்றமளிக்கும் ஒருவரின் நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். உண்மையில் அத்தகைய ஒருவரின் கடந்த கால வாழ்க்கை, தற்போதைய தொடர்புகள், எதிர்காலத் திட்டங்கள் ஆகியன அலசி ஆராயப்பட்டு அவர் சம்பந்தப்பட்டுள்ள சமூக செயற்பாடுகளினூடாகச் சரியான நிலைப்பாட்டைக் கண்டறிதல் இன்றியமையாததாகவுள்ளது.

எல்லா மனிதர்களும் சமமானவர்களே. பிறப்பு மனிதனின் தரத்தை அறியும் அளவுகோல் அல்ல. பண்டைய குடும்பப் பாரம்பரியத்திலிருந்து தொடர்ந்துவரும், சமமான பிறப்புப் பாரம்பரியத்துக்கு உரிமை கோரும் பொதுவான உரிமை நம் அனைவருக்கும் உண்டு. யுக யுகாந்திரங்களாக மனித குலம் பயணித்தது சமமான பாதையிலேயே. மனித குலத்துக்கு உரித்தான பூர்வீக உரிமைகள் நம் அனைவருக்கும் பொதுவானவை. எனினும் சில உட்கிடக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன், இனவாதத்தைக் கிண்டிவிடும் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தன, தற்போதைய சமூகச் சூழ்நிலை குறித்து இவ்வாறு குற்றஞ்சாட்டி வெளிப்படையாக நிந்திக்கும்போது, சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்து மேற்றட்டு வர்க்கமாக மாறும் மனிதர்களின் நடத்தைக்கோலங்கள் குறித்து விழிப்புணர்வோடிருக்கும் எவருக்கும் அவருடைய வரலாற்றை ஆய்ந்து பார்க்கும் ஆவல் உண்டாவது நியாயமானதே.

(மிகுதி அடுத்த வாரம்)



# சாகுந்தலம்

## அதே காவியம்... ஆனால் தொடர் நாடகம்...

**துஷ்யந்தன் - சகுந்தலை காதல் கதையை... சாபத்தால் பிரிந்த அவர்களின் காதல் எப்படி விமோசனம் பெற்றது என்பதைத் தொடர் நாடகக் கதைபோல காட்டும் படம் தான் இந்த 'சாகுந்தலம்' என்று ஒருவரியில் சொல்லிவிட முடியும்.**



**கதை**

ரிஷி ஆச்சிரமம் இருக்கும் காட்டுப் பகுதியில் ஆதரவற்ற குழந்தை ஒன்று அழுதுகொண்டிருக்கிறது. அந்தக்; குழந்தையை கண்டெடுக்கும் கண்வ மகரிஷி குழந்தைக்குச் சாகுந்தலா எனப் பெயரிட்டு வளர்க்கிறார். சாகுந்தலா வளர்ந்து பெரியவளாகிறாள். அப்போது ஒருநாள், அஸ்தினா புரத்தின் அரசன் துஷ்யந்தன் கண்வ மகரிஷியின் ஆச்சிரமத்திற்கு வருகிறான். சாகுந்தலாயைப் பார்த்ததும் அவள் மேல் காதல் வயப்படுகிறான். சாகுந்தலையும் துஷ்யந்தனைக் காதலிக்கிறாள். இருவரும் யாருக்கும் தெரியாமல் மணமுடித்துக்கொள்ள, விரைவில் வந்து அழைத்துச் செல்கிறேன் எனக் கூறித் துஷ்யந்தன் அஸ்தினாபுரம் செல்கிறான். வாக்களித்தபடி துஷ்யந்தன் வந்தானா? இல்லையா? சாகுந்தலையின் காதல் என்னவானது? அடுத்தடுத்து என்ன நடந்தது என்பதுதான் படத்தின் மீதிக்கதை.

காளிதாசரால் எழுதப்பட்ட 'சாகுந்தலம்' என்ற காதல் கதையை படமாக்கியிருக்கிறார் இயக்குநர் குணசேகர். படத்தின் தொடக்கத்தில் காட்டு விலங்குகள் ஊருக்குள் புகுந்து மக்களைத் தாக்குகின்றன. அந்த விலங்குகளை நாயகன் தாக்குகிறார். அடுத்து எதிரிக் கூட்டம் தாக்க வருகிறது. அதையும் நாயகன் எதிர்த்து தாக்குகிறார். சமந்தாவை திரையில் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்த ரசிகர்கள் மீது இத்தனை தாக்குதல்கள் எனப் படத்தின் முதல் அரை மணி நேரம் காட்டு விலங்குகளின் காட்சிகள் மூலம் அயர்ச்சியே மீதம்.

இதைக்கடந்து சென்றால் அங்கிருக்கும் விலங்குகளிடம் நண்பராக்கிக்



கொள்ளும் அதிதி பாலன், அவர்களையே கூகுள் வரை படமாக்கி 'சாகுந்தலாவை நீ பார்த்தாயா?' என முகவரி கேட்கிறார். அதன் பின்னர் அழகிய காட்சியாக அறிமுக மாகிறார் சமந்தா.

'காதல் காவியம்' என தொடக்கத்திலேயே அடை மொழியிடப்பட்ட படத்தில் சமந்தாவுக்கும் நாயகன் தேவ் மோகனுக்கும் இடையிலான காட்சியில் துளியும் சுவாரஸ்யமில்லை. கண்டதும் காதல். அடுத்து காதல் கடிதம், உடனே பாடல் எனக் குறைவான நேரத்தில் காதல் மலர்ந்து திருமணம் அரங்கேறிவிடுகிறது. இயக்குநர் 3 பாடல்களின் வழியே மொத்த படத்தையும் கடத்திவிட லாம் என நினைத்திருப்பது அவரின் நம்பிக்கையை காட்டுகிறது. முதல் பாடலில் காதல் மலர, இரண்டாம் பாடலில் சமந்தா கர்ப்பம் தரிக்க, மூன்றாம் பாடலில் பிரிவு நேர்கிறது. இறுதிப்பாடலில் பிரிந்த உள்ளங்களின் இணைவு. இறுதியில் சுபம்!

ஈர்ப்பில்லாத வசனங்களும், தமிழ் மொழிபெயர்ப்பில் மோலோங்கிய சமஸ்கிருத வார்த்தைகளும் புராணக் கதைகளை புரியாமல் பார்ப்பது போன்ற உணர்வைத் தருகிறது. சம்பந்தமேயில்லாமல் திடீரென காட்டப்படும் தேவலோகம், நீண்டு சோதிக்கும் புராணப் பின்கதைகள் பலவீனம். தப்பித் தவறியும் பார்வையாளர்களுக்குப் படம் பார்க்கும் உணர்வு வந்துவிடக்கூடாது என்பதில் தெளிவாக இருந்த மணிசர்மா வீணையை மீட்டும் இடங்களில் தொடர் நாடக அனுபவம் பேரானந்தம். சமந்தாவின் அழுகையும், பின்னணியில் வீணையின் நரம்பில் எழும் ஓசையும் காட்சியை கச்சிதமாகத் தொடர் நாடகத் தன்மைக்கு மாற்றிவிடுகிறது. இறுதிக்காட்சியில் வீடியோ விளையாட்டு வடிவிலான சண்டைக்காட்சிகள் திணிப்பு.

**பாத்திரங்கள்**

படத்தின் ஆறுதல் சமந்தா. அழகு நிறைந்த அப்பா விப் பெண் கதாபாத்திரத்தை நேர்த்தியாகக் கையாண்டி ருக்கிறார். இரண்டாம் பாதியில் அரசவையில் அவர் பேசும் வசனங்கள் பரவாயில்லை என்றாலும், அவருக் கான கதாபாத்திரத்தில் பெரிய அளவில் எங்கும் அழுத் தமில்லாதது ஏமாற்றம். சொல்லப்போனால் ஊரார் அவ ரைத் திட்டி வெளியேற்றும் முக்கிய காட்சிகளிலும் தொடர் நாடகத் தொனி வெளிப்படுவது பெரும் சிக்கல். தேவ் மோகன் நடிப்பில் தேவையானதை வழங்குகிறார்.

அதிதி பாலனை வெறும் புராணக்கதையை சொல்வ தற்கும், முனிவருக்கு பில்டப் ஏற்றுவதற்கும் மட்டுமே பயன்படுத்திருப்பது அவரது ரசிகர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதி! கவுதமி கதாபாத்திரத்துக்கான தேவையை கூகுளில் தேடியும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஹரீஷ் உத்தமன், மோகன் பாபு மற்றும் அல்லு அர்ஜுனின் மகள் அல்லு அர்ஹா ஆகியோர் குறைசொல்ல முடி யாத நடிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். சேகர் ஜோசப் ஒளிப்பதிவு முப்பரிமாணத் தொழில்நுட்பத்துக்கு பலம் சேர்க்கிறது. ஆக, தொடர் நாடகம் பார்த்த அனுபவமே மிச்சம்.

---

ஒண்டாகிறதோ?'எண்டு ஒரு விரக் திச்சிரிப்புச் சிரிக்க நாங்கள் 'உண்மை தான் தம்பி' எண்டம். ' மயி லண்ணை... பிள்ளையாரை எலி யிலை இருத்துறதோ... பீடத்திலை இருத்துறதோ எண்டு பிள்ளையா ரைக் கும்பிடுறதிலையே அடிபடு கிற ஆக்களல்லே நாங்கள்?' எண் டார் முருகேசர். மயிலர் ஒருமாதிரி நெளிஞ்சார்.

'போகிற போக்கிலை சாமியளை அமைதி தருவினம் எண்டு எங் கடை சின்னனுகளுக்குச் சொல்ல ஏலாது போலையல்லே கிடக்குது? அமைதியின்ரை வடிவமான புத் தனை அவன்ரையாக்களே பயங் கரவாதியாக்கிப் போட்டாங்கள்? இப்ப கலகக் கடவுளாயல்லே எங்க ளுக்குத் தெரியிறார்?' எண்டு கவ லையோடை சொன்னார் மாஸ்ரர். உண்மைதானே? நாங்கள் தலை யைளை ஆட்டினம்.

'எங்கடையாக்களின்ரை மூளை யின்ரை வேகத்தப் பாருங்கோவன்... இருவத்தைஞ்சாந் தேதி பொது வேலை முடக்கம் எண்டு திட்டம் போடுகினம்... தூர இடங்களிலை வேலை செய்யிறவங்கள் திங்கள் போய் நீங்கள் முடக்க சாப்பாடு தண்ணியில்லாமல் காயிறதும் வீட்டுக்கு வாறதெண்டு அலையிறது மல்லே நடக்கப்போகுது? முக்க ளுக்கு கரைச்சலில்லாமல் செய்யிற எண்ணம் இல்லை..' எண்டு சுதன் சொல்ல 'போராட்டமெண்டிறது திட்டத்தோடை ஒற்றுமையுமல்லே சேரவேண்டினது... அதுகளை மறந்துபோட்டு...தாங்கள்தான் தலைவருகளாம்...' எண்டு கொதிச்சார் முருகேசர்.

'சிலையளை கண்ட இடங்களி லையும் வைக்கிறதாலை எங்கடை தலைவர்மாரும் கஸ்ரப்படுகினம்... மழை, வெய்யில் நாய்மூத்திரம், காகக்கழிவு எண்டு படுகிறபாடு... அதுக்குள்ளை இப்ப சாமியளையும் படாதபாடு படுத்துற வேலையை யல்லே நடக்குது?' எண்டுகொண்டு எழும்பினன். 'கதிரேசண்ணை உனக்குச் சிலையொண்டு வைப்ப மெண்டு யோசிச்சனாங்கள்.. நீய ண்ணை?' எண்டு கனகர் சொல்ல சிரிச்சினம். 'அப்பிடியெண்டால் இப் பவே நான் இப்ப சொன்ன அத்தி னையையும் செய்.. நான் போய்க் குளிச்சு முழுகித் துப்பரவாகலாம்;...' எண்டுகொண்டு வர சிரிச்சினம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.04.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781